# ஒக்லஹோமா தமிழ்ச் சங்கம்

8304 N.W 113 Terrace, Oklahoma City, OK 73162

# தமிழ் முல்லை

மலர் - 1 அக்டோபர் 1992

அன்புள்ள ஒக்லஹோமா தமிழ் அன்பர்களுக்கு,

நமது தமிழ்ச் சங்கம் எனும் இளம் பறவை முதலாண்டு நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிஞ்சுப் பறவை மெதுவாகச் சேர்த்தவற்றைத் தமிழ்ச்சங்கத்தின் செய்தி மடலாய் 'தமிழ் முல்லை' எனும் இதழ் வடிவில் உங்கள் முன் வைக்கிறோம். 'தமிழ் முல்லை' நம் சங்கத்தின் முதல் முயற்சி. தமிழ் மணம் நிறைந்த இத்தமிழ் முல்லை அமெரிக்க மண்ணில் வாழும் அனைத்துத் தமிழர் இல்லங்களையும் சென்றடைய வேண்டுமென விழைகிறோம். நம் தமிழ்ச்சங்கத்தின் கடந்த நிகழ்ச்சிகளோடு இனி வரப்போகும் சுவையூட்டும் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் நம்மிடையே பகிர்ந்து கொள்வதே 'தமிழ் முல்லை'யின் நோக்கமாகும். முல்லையை மாலையாக்கி தமிழன்னையைக் கொண்டாடுவது நம் யாவரின் பொறுப்பு அல்லவா? எனவே உங்கள் கைத்திறனைக் காட்ட ஓய்ந்திருக்கும் வண்ணத்தூரிகைகளைத் தீட்டுங்கள். உடனடியாக உங்கள் படைப்புக்களை அனுப்பி வையுங்கள். 'தமிழ் முல்லை' ஆண்டிற்கு இருமுறை பூக்க வேண்டுமென்பது எங்கள் விருப்பம்.

அன்புடன்

தி. லெ. பரசுராம்



## பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் அவர்களின் வருகை: மே 15, 1992

பெர்க்லி பல்கலைகழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக பணியாற்றி வரும் திரு ஜார்ஜ் ஹார்ட் அவர்கள் ஒக்லஹோமா நகரத்திற்கு வந்திருந்து, கம்பராமயணத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அவர் பெர்க்லி பல்கலைகழகத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியர்க்குரிய இடம் ஒன்றின் அமைப்பிற்காக பெரும் ஆதரவு தந்து கொண்டிருக்கிறார். அப்பெரும்பணிக்கு உதவியாக ஒக்லஹோமா தமிழ் அன்பர்களிடமிருந்து $1500க்கு மேலும், நார்மன் மாணவ நண்பர்களிடமிருந்து $500ம் திரட்டப்பட்டது. அமெரிக்காவில் தமிழ்க் கல்வி நிலைத்து நின்று பெருமையுறவும், வளரவும் வழிகோலும் இப்பணி வெற்றியடைய நம் யாவரின் சார்பிலும் வாழ்த்துகிறோம். ($400000 சேர்ந்தால் இப்பணி நிறைவேறும். ஜனவரி 93க்குள்ளாக இதை நிறைவேற்றும் திட்டம் உள்ளது.)

## ஒக்லஹோமாவில் இரண்டாம் இலக்கியக் கூட்டம்:


ஜூன் 15, 1992 ஆம் தேதியன்று நடந்த இலக்கியக் கூட்டத்தில் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் 'பாரதி புதியசிந்தனையின் விடிவெள்ளி' என்ற தலைப்பில் தனக்கே உரிய கணீர் குரலில் நகைச்சுவை ததும்ப சொற்பெருக்காற்றினார். மதுரைப் புலவர் வாசு கணபதி அவர்களும் பெண்ணொழுக்கம் பற்றி பேசினார். நண்பர்களுக்கு செவி விருந்தோடு வயிற்றுக்கும் விருந்தளிக்கப் பட்டது.

## 1992-93 செயற்குழு

தி. லெ. பரசுராம் - தலைவர் (405) 728-1840
கே. ஹேமந்த்குமார் - துணைத்தலைவர் (918) 252-4061
மு. மாசிலாமணி - செயலர் (405) 321- 6288
ச. லட்சுமிவராகன் - இணைச்செயலர் (405) 360-5943
கே. ராம்சந்த் - பொருளர் (405) 842-2412

## செயற்குழு அங்கத்தினர்:

கி. சேகர் (405) 340-8069
லலிதா சுந்தரராஜன் (405) 360-0811
சி. சண்முகமணி (405) 327-5149
கிருஷ்ணமூர்த்தி (918) 224-3377



நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும்வகை செய்தல் வேண்டும்
- பாரதியார்

### அமெரிக்கக் கூட்டுத் தமிழ்ச் சங்க மாநாடு:

இவ்வாண்டுக் கூட்டுச் சங்கத்தின் மாநாடு மே 23, 24, 25 தேதிகளில் வாஷிங்டன் D. C. யில் சிறப்பாக நடை பெற்றது. சிறப்பு விருந்தினராக தமிழறிஞர் பேராசிரியர் சாலமன் பாப்பையா, புலவர் வாசு கணபதி மற்றும் தமிழறிஞர் பலர் தமிழ் நாட்டிலிருந்தும், அமெரிக்காவின் பல பகுதிகளிலிருந்தும் வந்து பங்கு கொண்டனர். தமிழ் மொழி வளர்ப்புக்கும், அமெரிக்க வாழ் தமிழர் நலனுக்கும் தேவையான பல திட்டங்களை வகுத்து திறம்பட செயலாக்கி வருகிறார்கள். இத்திட்டங்களில் ஒன்று, தமிழ் மொழியை ஒரு தொன்மை இலக்கிய மொழி என ஐ. நா. சபையினரால் ஏற்றுக் கொள்ளப் படுதல். அடுத்த ஆண்டு ஜூலை மாதம் நடக்கவிருக்கும் அ. கூ. த. சங்கத்தில் நம் சங்கத்தின் உறுப்பினரும் கலந்து கொள்ள விழைகிறோம்.

### நான்காம் தமிழ்க் கூட்டம்:

ஒக்லஹோமா மாநிலத் தமிழ்க் கூட்டம் இவ்வாண்டு நவம்பர் 21ஆம் நாள் சனிக்கிழமை பிற்பகல் ஒக்லஹோமா நகரில் நடக்கவிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் முன்னிலும் சிறப்பாக வளர்ந்து வந்திருக்கும் இவ்விழா இன்னும் வியக்கத்தகும் முறையில் அமைய உங்கள் கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன.

நமது தமிழ்ச் சங்கம் ஒரு வரி விலக்குச் சங்கமாக (Non- profit Organization) ஆக்குவதற் கான முயற்சிகள் மிகத்தீவிரமாக நடந்து கொண்டிருக்கின்றன.


## நான்காம் தமிழ்க்கூட்டத்தின் கலை நிகழ்ச்சிகள்:

இவ்வாண்டு கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் தங்கள் இயல் இசை நாடக ஒத்திகைகளை அல்லது திறமைகளைக் குறித்துத் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்


திரு T. L. பரசுராம் - 728-1840


திருமதி லதா ராம்சந்த் - 842-2412

கலை நிகழ்ச்சிகள் எளிமையாய் இனிமையாய் எல்லோருக்கும் இன்பம் அளிப்பவையாய், தமிழ் மணமுடையனவாய் இருக்க வேண்டும்.



எல்லோரும் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராய் சேர்ந்து நமது சங்கத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.





## ஆண்டு மலர்

இந்த ஆண்டு நான்காம் தமிழ்க் கூட்டத்தின் பொழுது ஆண்டு சிறப்பு மலர் ஒன்றை வெளியிடத் திட்டமிடப் பட்டுள்ளது. அதற்காக கட்டுரைகள், கதைகள், கவிதைகள், புதிய செய்திகள், கருத்துக்கள், சிறுகதைகள் வரவேற்கப் படுகின்றன. உங்கள் கற்பனைச் சிறகுகளைப் பறக்க விடுங்கள். உங்கள் படைப்புக்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அக்டோபர் 25ஆம் தேதிக்குள் உங்கள் எழுத்துக்களை அனுப்பிவையுங்கள்.

## வைரமுத்து பக்கம்



*சமீபத்தில் குங்குமம் பத்திரிக்கையில் வெளிவந்த ஒரு செய்தி*

### எனக்குப் பிடித்த ஊர்!

**ஒக்லஹோமா — அமெரிக்கா**

இரவு விமானம் அந்த நகரத்தின் மீது தாழப் பறந்தபோதே சின்ன வயதில் அம்புலிமாமா கதைகளில் படித்த இந்திரலோகப்பட்டணம் இது வென்றே எண்ணத் தோன்றியது எனக்கு.

அது பளபளப்பான நகரம்;

ஆனால் பரபரப்பில்லாத நகரம்.

ஒரு சீமாட்டியின் உள்ளங் கையைப் போலத் தாய்மையான நகரம்.

என் நண்பர் பரசுராமும், திருமதி ராதா பரசுராமும் ஊருக்கு எழில் சேர்க்கும் ஒக்லஹோமா ஏரிக்கு என்னை அழைத்துப் போனார்கள்.

இது ஏரியா? கடலா? என்று கேட்டேன்.

ஏரிதான் என்றார்கள்

சுதந்திரம் – சுகாதாரம் – நிறைவு – நிம்மதி – உழைப்பதற்கு வாய்ப்பு – ஓய்வெடுப்பதற்கு வசதி! அதுதான் எனக்குப் பிடித்த ஊர்.

அவகாசம் கிடைத்தால் அங்கு சென்று இளைப்பாறவே ஆசை.

ஒக்லஹோமா

நான்காம்

தமிழ்க் கூட்டம்

Oklahoma
Tamil
Sangam

# OKLAHOMA TAMIL SANGAM

# *FOURTH TAMIL KOOTAM*

***THIS YEAR'S GRAND TAMIL KOOTAM WILL BE ON NOVEMBER 21, 1992, SATURDAY, 3:00 PM AT PUTNAM CITY CENTRAL JUNIOR HIGH 4020 N. GROVE , OKLAHOMA CITY, OK (One block east of McArthur Avenue & one block north of N.W. 39 Exp. Way)***

இவ்வாண்டும் தமிழன்பர்கள் யாவரும்
வருகைதந்து விருந்துண்டு மகிழ்ந்து
இவ்விழாவினைச் சிறப்பித்து
வெற்றிகரமாக நடத்திவைக்க
கோருகிறோம்



***Remember to mark in your calendar***